உ

ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் முன்போற்றும்
திருப்புகழைக் கேளீர் தினம் "

| | | |
|---|---|---|
| மலர். 2<br>Vol. 2 | ஈஸ்வர௵ ஆனிமீ 1உ<br>ஜூன்—1937 | இதழ் 3<br>No. 3 |

## திருப்புகழ்.

### திருச்செந்தூர்.

விறல்மார னைந்து மலர்வாளி சிந்த
மிகவானி லிந்து வெயில் காய
மிதவாடை வந்து தழல்போல வொன்ற
வினைமாதர் தந்தம் வசைகூற

குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
கொடிதான துன்ப மயல்தீர
குளிர்மாலை யின்க ணணிமாலை தந்து
குறைதீர வந்து குறுகாயோ

மறிமா னுகந்த இறையோன் மகிழ்ந்து
வழிபாடு தந்த மதியாளா
மலைமாவு சிந்த அலைவேலை யஞ்ச
வடிவே லெறிந்த அதி தீரா

அறிவா லறிந்து னிருதா ளிறைஞ்சும்
அடியா ரிடைஞ்சல் களைவோனே
அழகான செம்பொன் மயில்மே லமர்ந்து
அலைவா யுகந்த பெருமாளே.

## பதவுரை.

மறிமான் உகந்த - மான்குட்டியைக் கருணையுடன் காத்திலேந்தியுள்ள, இறையோன் - எப்பொருட்கும் இறைவராகிய சிவபெருமான், மகிழ்ந்து - பிரணவோபதேசம் பெறுவதற்காக மனமகிழ்ச்சியுடன், வழிபாடு தந்த - சிஷ்யபாவ மூர்த்தியாக நின்று வழிபட்ட, மதியாளா - ஞானவடிவினரே!, மலை - கிரவுஞ்ச மலையும், மாவு சிந்த - மா மரமாக நின்ற சூரபன்மனும் அழியுமாறும், அலை வேலை அஞ்ச - அலைகளையுடைய கடல் அஞ்சவும், வடிவேல் எறிந்த - கூர்மை பொருந்திய வேலாயுதத்தைப் பிரயோகம் புரிந்த, அதி தீரா - மிகவுந் தைரியத்தை யுடையவரே!, அறிவாலறிந்து - பாச அறிவும் பசு அறிவும் நீங்கிய மெய்யறிவினால் உணர்ந்து, உன் இருதாள் இறைஞ்சும் - தேவரீரது திருவடித் தாமரைகள் இரண்டையும் வணங்குகின்ற, அடியார் இடைஞ்சல் - அடியார்களது இடையூறுகளை, களைவோனே - நீக்குபவரே!, அழகான செம்பொன் மயில்மேல் - அழகியதும செம்பொற் சாயலை யுடையதுமாகிய மயிலின்மிசை, அமர்ந்து - ஏறிக்கொண்டு, அலைவாய் உகந்த - திருச்சீரலைவாய் என்னும் புனிதக்ஷேத்திரத்தில் மகிழ்ந்து வீற்றிருக்கின்ற, பெருமாளே - பெருமையிற் சிறந்தவரே!, விறல் மாரன - யாவரையும் மயக்குகின்ற சக்தியுடைய மன்மதன், மலர்வாளி சிந்த - மலர்க்கணைகளை வீசவும், வானில் - ஆகாயத்தில், மிக இந்து வெயில் காய - சந்திரன் மிகவும் குளிர்ந்த கிரணங்களைப் பொழியவும், மிதவாடை வந்து - மெல்லிய தென்றல் காற்று வந்து, தழல்போல ஒன்ற - அக்கினிபோல் நெருங்கவும், வினை மாதர் தம் தம - வினைவசப்பட்ட மாதர்கள் தங்கள் தங்கள் மனமபோன வண்ணம், வசை கூற - வசைமொழிகளைக் கூறவும், குறவாணர் குன்றில் உறை - ஐம்புலன்களாகிய குறவர்களுடைய மலையில் வசிக்கின்ற, பேதைகொண்ட - அறியாமையையுடைய பெண்ணாகிய ஜீவான்மாவடைந்த, கொடிது ஆன துன்ப - கொடிய துன்பத்தைப் புரியும், மயல்தீர - மயக்கம் நீங்க, குளிர் மாலையின் கண் - குளிர்ச்சி பொருந்திய மாலைநேரத்தில அணிமாலை தந்து - தேவரீரது திருமார்பிலணிந்துள்ள மாலையைத் தந்து, குறைதீரவந்து - இந்த ஜீவான்மாவினது குறை நீங்குமாறு வந்து, குறுகாயோ - அணுக மாட்டீரோ?

## பொழிப்புரை.

தாருகவனத்திருடிகளா லனுப்பப்பட்ட மான் குட்டியைக் கருணையினால் காத்திலேந்தியுள்ள, எவ்வுயிர்க்கும் எப்பொருட்கும் இறைவராகிய சிவபெருமான், குடிலை மந்திரோபதேசம் பெறும் பொருட்டு மகிழ்ச்சியுடன் வழிபாடுசெய்த ஞான சொரூபியே! கிரவுஞ்ச மலையும், மா மரமாகிநின்ற சூரபன்மனையும் அழியும்படியும்; அலைகளையுடைத்தான சமுத்திரம் அஞ்சவும், வடிவேலாயுதத்தை எறிந்த மிகுந்த தைரியத்தை யுடையவரே!, பதிஞானத்தால் மெய்ப் பொருளையறிந்து தேவரீரது அருணசரணாரவிந்தங்கள் இரண்டையும் வணங்குகின்ற அடியார்களது இன்னல்களை யகற்றுகின்றவரே! அழகிய செம்பொன்னனைய மயில்மேல் அமர்ந்து திருச்சீரலைவாய் என்னுந் திருத்தலத்தில் மகிழ்ச்சியுடன் உறைகின்ற பெருமையிற் சிறந்தவரே! (எத்திறப்பட்டாரையும் மயக்குகிற) சக்தியையுடைய மன்மதன ஐந்து மலர்க்கணைகளைச் சிந்தவும, ஆகாயத்தில் சந்திரன் மிகவும்குளிர்ந்த கிரணங்களைப்பொழியவும், மெல்லியதென்றற்காற்று அக்கினிபோல் வந்து வெப்பத்தைச் செய்யவும், வினைகளைப்புரியும் பெண்கள் தங்கள் தங்களுக்குத் தோன்றியவண்ணமெல்லாம் நிந்தை மொழிகளைச் சொல்லவும், ஐம்புலன்களாகிய வேடுவர்களது கன்மங்களாகிய மலைமேலுறைகின்ற ஜீவான்மாவாகிய பெண்மங்கைகொண்ட கொடிய துன்பத்தை விளைக்கின்ற மயக்கம் நீங்குமாறு, குளிர்ந்த மாலை நேரத்தில் தேவரீர் அணிந்துகொண்டுள்ள மலர்மாலையைத்தந்து இந்த ஜீவான்மாவினது குறைதீருமாறு வந்து அணுகாயோ?

## விரிவுரை.

விறல்மாரன் :—

யயாதி, நகுஷன், புரூரவன், சர்யாதி முதலிய ராஜரிஷிகளையும், காசிபர், சியவனர், கௌதமர், பாரசர், விசுவாமித்திரர் முதலிய பிரம்ம ரிஷிகளையும்; இந்திரன், அக்கினி, பிரமன், திருமால் முதலிய இமையவர்களையும்; தனது மலர்க்கணைகளால் மயக்கி வாகைசூடி யோன் ஆதலால் மதனனை விறல்மாரன் என்றனர்.

ஐந்து மலர்வாளி :—

*மன்மதன் கணைகள் ஐந்து. அவையாவன: தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம் என்பன. இவற்றின் பெயர் முறையே :— உன்மத்தம், மதனம், சம்யோகம், சந்தாபம், வசீகரணம் என்பனவாம். இவை செய்யும் அவத்தை :—சுப்ரயோகம், விப்ரயோகம், சோகம், மோகம், மரணம். இதன் விவரம : சுப்ரயோகம் :—சொல்லும் நினைவும்; விப்ரயோகம் :—வெய்துயிர்த்திரங்கல்; சோகம்:—வெதுப்புந் துய்யன தெவிட்டலும்; மோகம்:—அழுங்கலும் மொழி பல பிதற்றலும்; மரணம் :—அயர்ப்பும் மயக்கமுமாம்.*

பேதைகொண்ட கொடிதான துன்பமயல் :—

*தலைவன்மீது காதல்கொண்ட தலைவிக்கு குளிர்ந்த சந்திரனது தண்ணொளி வெப்பத்தையும், தென்றல் காற்று அனல்போன்ற வெம்மையையும் செய்யும். ஈண்டு ஜீவான்மா நாயகியாகவும், பரமான்மா நாயகனாகவும் வைத்து; பரமான்மாவாகிய நாயகன்மீது காதல் கொண்ட நாயகியாகிய ஜீவான்மா மிகுந்த தாபத்தையடைந்து வருந்துகின்றது. இங்ஙனம் நாயகி நாயகபாவத்தில் எழுந்த திருப்புகழ் பல.*

“ துள்ளுமத வேள் கைக் கணையாலே
தொல்லை நெடுநீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே ”

—*திருப்புகழ்,*

தென்றலையம்பு புனைவார் குமார திமிரமுந்நீர்த்
தென்றலையம்புய மின்கோ மருக செழுமறைதேர்
தென்றலையம்பு சகபூ தரவெரி சிந்திமன்றல்
தென்றலையம்பு படுநெறி போயுயிர் தீர்கின்றதே.

*இங்ஙனம் பரமான்மாவின்மீது வேட்கைகொண்ட ஜீவான்மா அவ்வேட்கைதீர மலர்மாலையை விரும்புகிறது.*

“ நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே ”

—*திருப்புகழ்.*

மறிமான் . . . . . வழிபாடுதந்த மதியாளா:—

## அறுமுகச் சிவனாரை ஐம்முகச் சிவனார் வழிபட்ட வரலாறு.

கயிலைமலையின்கண் குமாரக்கடவுள் வீற்றிருந்த ஞான்று சிவ வழிபாட்டின்பொருட்டு வந்த அமரர்கள் அனைவரும் குகக்கடவுளை வணங்கிச்சென்றனர். அங்ஙனம் வணங்காது சென்ற பிரமனை யழைத்து பிரவணப்பொருளை வினவி, அதனையுரைக்காது விழித்த அம்புயனை அறுமுகனார் சிறைப்படுத்தி, முத்தொழிலும் புரிந்து தாமே மூவர்க்கும் முதல்வன் என்பதை மலையிடை வைத்த மணிவிளக்கென வெளிப்படுத்தினர்.

பின்னர் ஒருகால் கந்தாசலத் திருக்கோயிலின்கணிருந்த கந்தக் கடவுள் தந்தையாராகிய தழல்மேனியாரைத் தெரிசிக்கச் சென்றனர். பொன்னார மேனிப்புரிசடை யண்ணல் 'புதல்வ! இங்ஙனம் வருக" என்று எடுத்து அணைத்து உச்சி மோந்து முதுகுதைவந்து "குமார! நின் பெருமையை உலகமெவ்வாறு தெறியும்: மறைகளால் மனத் தால் வாக்கால் அளக்கவொண்ணாத மாப்பெருந்தகைமையுடைய நின்னை உள்ளபடி உணரவல்லார் யாவர்?" என்று புகழ்ந்து அதனை விளக்குவான் உன்னி எத்திறப்பட்டோர்க்கும் குருநாதனின்றி மெய்ப் பொருளை யுணரமுடியா தென்பதையும், குருஅவசியம் இருத்தல் வேண்டுமென்பதையும் உலகிற்கு உணர்த்துமாறுந் திருவுளங்கொண்டு, புன்முறுவல்பூத்த முகத்தினராய் வரைபகவெறிந்த வள்ளலை நோக்கி,

அமரர்வணங்குங் குமாரநாயக! அறியாமையானாதல், உரிமை குறித்தாதல் நட்பினர் மாட்டும் பிழைகள் தோன்றல் இயற்கை. அறிவின்மிக்க ஆன்றோர் அறிந்து ஒரு பிழையும் செய்கிலார். அறி விற குறைந்த சிறியோர் அறிந்தும், அறியாமையானும் பெரும் பிழை களையுஞ் செய்வர். அவ்வத்திறங்களின் உண்மைகளை யறிந்த பெரி யோர் அதுபற்றிச் சினந்து வைரங்கொள்ளார். ஆதலால் அம்புயனும் அறிவின்மையால் நின்னைக்கண்டு வணக்கம் புரியாது சென்றனன். அவனை விளித்து அவன் மூக்கிலும்செவிகளிலும் வாயிலும் கண்களி லும் உதிரஞ் சொரியுமாறு குட்டி, கணங்களால் அடிப்பித்து, பல நாளாகச் சிறையிலிருத்தி, எல்லார் தொழிலையும் நீயே யியற்றினை. எல்லார்க்குச்செய்யும் வணக்கமும் நினக்கே யெய்துந்தகையது; அறு

சமயத்தார்க்கும் நீயே தலைவன்" என்று எம்பிரானார் இனிதுகூறினர். எந்தை கந்தவேள் இளநகைகொண்டு "தந்தையே! ஓ மெழுத்தின் உட்பொருளை யுணராப் பிரமன் உலகங்களைச் சிருட்டி செய்யும் வல்லவனாதல் எவ்வாறு? அங்ஙன மறியாதவனுக்குச் சிருட்டித் தொழிலை யெவ்வாறு கொடுக்கலாம்?" என்றனர்.

சிவபெருமான் "மைந்த! நீ அதன் பொருளைத் தெரிக்குதி" என்ன, குன்றெறிந்த குமாரக்கடவுள் "அண்ணலே! எந்தப்பொருள்களும் உபதேசமுறையினாலன்றி உரைத்தல் தகாது. காலம் இடம் என்பன அறிந்து, முறையினாற் கழறவல்லேம்" என்றனர். அரனார் கேட்டு "செல்வக்குமா! உண்மையே உரைத்தனை; ஞானபோத உபதேசப்பொருள் கேட்டதற்கு சிறந்ததென்னும மாசிமாதத்து மக நாள் இதோ வருகிறது; நீ எஞ்ஞான்றும நீங்காது விருப்புடனமருந் தணிகைவெற்பை யடைகின்றோம்" என்று கணங்களுடன் புறப்பட்டு ஏறார்ந்து தணிகைமாமலையைச் சார்ந்தனர். குமாரக்கடவுள் தோன்றுமை கண்டு, பிரணவப்பொருள் முதலிய உணமையுபதேசமெல்லாம் தவத்தானும் வழிபாட்டானுமே கிடைக்கற்பாலனவென்று உலகங் கண்டு தெளிந்துய்வான றவம்புரிய ஆரம்பித்தனர். ஞானசத்திதரக் கடவுளாரின் அத்தாணி மண்டபம எனப்படூஉம் திருத்தணிமலைச் சாரலின் வடகீழ்ப்பாற் சென்று, தம்புரிசடை தூங்க, வேற்படை விமலனை உளநிறுவி ஓர் கணப்பொழுது தவம்புரிந்தனர். எல்லாம் வல்ல இறைவன் அங்ஙனம ஒரு கணப்பொழுது தவமுஞற்றலானன்றே அத்தணிகைமலை கணிக வெற்புஎனப் பெயர்பெற்றதென்ப.

கண்ணுதற்கடவுள இங்ஙனம் ஒரு கணம் தவமியற்றக் கதிர் வேலண்ணல் தோன்றலும், ஆலமுண்ட அண்ணல் எழுந்து குமரனை வணங்கி வடதிசை நோக்கி நின்று பிரணவ உபதேசம் பெறும் பொருட்டு சீடனது இலக்கணத்தை உலகிற்கு உணர்த்தும்பொருட்டு சிஷ்யபாவகமாக நின்று வந்தனை வழிபாடுசெய்து பிரணவோபதேசம் பெற்றனர்.

"திருறுங் குமரனை யிருந்தவி சேற்றியங்
கதிர்கழல் வந்தனை யதனொடுந் தாழ்வயிற்
சதுர்பட வைகுபு தாவரும் பிரணவ
முதுபொருட் செறிவெலா மொழிதரக் கேட்டனன்.

—தணிகை புராணம்.

"நாத போற்றி யெனமுது தாதை கேட்க அநுபவ
ஞான வார்த்தை யருளிய பெருமாளே"
—(ஆலமேற்ற) திருப்புகழ்.

"நாதா குமரா நமவென் றரனார்
ஓதா வென ஓதிய தெப் பொருள்தான்"
—அநுபூதி.

தமிழ்விரக உயர்பரம சங்கரன் கும்பிடுந் தம்பிரானே.
—(ஒருவரையு) திருப்புகழ்.

மலைமாவு சிந்த . . . . . . வடிவேலெறிந்த :—

*மலை :—கிரவுஞ்சமலை. அதனை எறிந்தவரலாற்றை திருப்புகழமிர்தம் முதற்பாகம் 36-ம பக்கத்திற் காண்க.*

## மா வெறிந்த வரலாறு.

*மாயையின் மகனாகிய சூரபன்மன் சிவமூர்த்தியின்பால் பற்பல வரம் பெற்று உளந்தருக்கி அறநெறி பிறழ்ந்து அமரர்க்கு அலக்கண் விளைத்த ஞான்று, குமாரக்கடவுள் தேவர் சிறைதீர்ப்பான் அமர் தொடங்கி அசுரர் அனைவரையும் அட்டனர். முடிவில் சூரபன்மன் போர்க்கோலங்கொண்டு ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமுள்ள சேனைகளைத் திரட்டிக்கொண்டு போர்க்களமுற்றனன். அப்பெருந்தானையைக்கண்ட பூதவெள்ளங்களும் சேனாபதிகளும் வீரபாகு ஒழிந்த ஏனைய வீரர்களும் உளநடுங்கினர். தேவர்கள் அளக்கவொணா அலக்கணையடைந்தனர். குகப்பெருமானார் அப்பெருஞ் சேனைகளையெல்லாம அழித்தனர். முருகவேளும் சூரபன்மனும் நெடுநேரம் போர் புரிந்தனர். சூரபன்மனுடைய பறபல ஆயுதங்களும் மாயைத்திறங்களும் ஒழிந்தன அவுணர்கோன் முடிவில் "இக்குமாரனைக் கொணர்ந்து யுத்தத்தை விளைவித்த தேவர்களை முதலில் கொன்று சிறிது சினந்தணிந்தபின் இக்குமாரனோடு போர் புரிவேன்" என்று னைத்து ஓர் மாயாமந்திரத்தைச் செபித்து உலகமுழுவதும் பெரிய ருள் சூழுமாறு செய்து; அவ்விருளில் வாளையேந்தி தேவர்களைக் கால்லுதற்பொருட்டு விண்ணிடை பாய்ந்தனன். அதனைக் குறிப் ாலுணர்ந்த அரியயனாதியமரர்கள்*

தேவர்கள் தேவே யோலம் சிறந்தசிற் பரனே யோலம்
மேவலர்க் கிடியே யோலம் வேற்படை விமலா வோலம்

பாவலர்க் கெளியா யோலம் பன்னிரு புயத்தா யோலம்
மூவரு மாகி நின்ற மூர்த்தியே யோலம் யோலம்.

என்று முறையிட்டனர். அம்முறையைக் கேட்டு மூவிரு முகங் கொண்டுள்ள முழுமுதற்கடவுள், சேயமுகை தாயைப்போல் தண்ணருள் சுரந்து, தமது திருக்கரத்தில் வைகுறு செங்கதிர்வேலாயுதத்தை நோக்கி "நீ விரைந்துசென்று சூரபன்மனுடைய மாயைகளையும் ஆற்றலையும் அழித்து அவனது உடலைப்பிளந்து வருதி" என்று ஆணை தந்தனர். உடனே வேற்படையானது ஆயிரங்கோடி சூரியர்கள் ஒருங்குகூடினாற்போலத் திகழ்ந்து அக்கினி மழையைப் பொழிந்துகொண்டு சூரன் கொண்ட இருளுருவத்தை இமைப்பொழுதிலழித்தது.

அரியு மயனோ டபய மெனவே
அயிலை யிருள்மேல் விடுவோனே.
—(இருவர்) திருப்புகழ்.

சூரபன்மன் "முடிவில்லாத வரத்தையுடைய என்னை இவ்வேற்படை யாதுசெய்ய வல்லது? இதன் திறத்தைக் காண்கின்றனன்" என்று அண்ட முகடுகள் நடுங்கச் சிரித்து, மிகுந்த சீற்றங்கொண்டு, "சமுத்திரம், பூதலம், பிரமாதி தேவர்களது உலகங்கள் உயிர்கள் முதலிய அனைத்தையும் இப்பொழுதே யழிப்பன்" என்று விரைந்து சென்று கடல் நடுவில், நெருப்புப்போலுந் தளிர்களும், புகைபோன்ற இலைகளும், மேகக்கூட்டங்கள் போன்ற கிளைகளும், மரகத கற்கள் போன்ற பிஞ்சுகளும், மாணிக்கத்தையொத்த பழங்களுங்கொண்டு பிரமாண்டச் சுவாவரையிலும் வேரோடி, இலக்கயோசனை தூர மளவும் விசாலித்த தலைகீழான மாமரவடிவங்கொண்டு, சகல லோகங்களையும் நடுநடுங்கமோதினன்

வளனிய னலங்கல் கான்று வானறஞை புகையினல்கிப்
பொானனென விணர்க ளீன்று மரகதம் புரையக காய்த்துச்
செந்நிற மணிகளோனனத் தீம்பழங் கொண்டு கார்போற்
றுன்னுபல கவடுபோக்கிச் சூதமா யவுண னின்றுன்

அஷ்டநாகங்களும் திக்கஜங்களும் சந்திர சூரியரும் எல்லாவுயிர்களும் அஞ்சி ஓலமிட்டன. அந்த மாமரம் சிறிது அசைந்தபொழுது எல்லா வுலகங்களும் அசைந்தன; குலகிரிகள் பொடிபட்டன; உல

கத்தைத் தாங்கும் கூர்மமும் ஆதிசேடனும் புரண்டனர் நட்சத்திரங்கள் உதிர்ந்தன. அண்டங்களெல்லாந் தகர்ந்தன. நாரணனுலகும் நான்முகனுலகும் அழிந்தன. தேவர்களெல்லாம் வெருவி கயிலையைநாடி இரிந்தனர். அக்கால் அறுமுகப்பெருமான் விடுத்த அயிற்படை, ஆயிரங்கோடி யண்டத்து அக்கினியும் ஒன்று சேர்ந்தாற்போல் பேரனல்வடிவு தாங்கிச் சென்று

தேயுவி னெடுத்த வண்டத் திறங்களும் பிறங்கு ஞாலத்
தாயிரகோடி யண்டத் தங்கியு மொன்றிற் றென்ன
மீயுயர்ந் தொழுகி யான்றோர் வெருவருந் தோற்றங் கொண்டு
நாயகன் றனது தெய்வப் படைக்கல நடந்த தன்றே

மூதண்ட முகடுவரை வளர்ந்தோங்கி கிளைகளையசைத்து உலகங்களை யெல்லாம் அசைத்தழிக்கின்ற மா மரத்தை இரு கூறாகப் பிளந்தது.

விடம்பிடித் தமலன் செங்கண் வெங்கன லுறுத்திப் பாணி
யிடம்பிடித் திட்ட தீயிற் றோய்த்துமுன் னியற்றி யன்ன
வுடம்பிடித் தெய்வ மிவ்வா றுருகெழு சேலவி னேகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர் மாமுதல் தடிந்த தன்றே.

"கவடு கோத் தெழும் உவரி மாத்திறல்
காய வேல் பாடுடன்"

—திருப்புகழ்

## கருத்துரை.

இறைவராகிய சிவபெருமான் வழிபாடு செய்த ஞானசொரூபியே! கிரவுஞ்ச மலையும் மாமரத்தையும் அழியும்படி வேலாயுதத்தை விடுத்த அதிதீரரே! அடியார்களது இன்னல்களை அகற்றுபவரே! செந்திலாண்டவனே! ஜீவான்மாவின் துன்பம் நீங்குமாறு பரமான்மாவாகிய தேவரீரது திருமார்பிலணிந்துள்ள மலர்மாலையைத் தந்து ரக்ஷித்தருள வரமாட்டீரோ?

---

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

# ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(49-ம் பக்கத் தொடர்ச்சி)

गिरौमन्निवासे नरायेधिरुढाः
तदा पर्वते राजते तेधिरुढाः ।
इतीवब्रुवन् गन्धशैलाधिरुढः
सदेवो मुदेमे सदाषण्मुखोस्तु ॥

(6) கி³ரௌ மந்நிவாஸே நராயே தி⁴ரூடா⁴:
த³தா³ பர்வதே ராஜதே தே³தி⁴ ரூடா⁴: ।
இதீவ ப்³ருவன் க³ந்த⁴ சைலாதி⁴ ரூடா⁴:
ஸதே³வோ முதே³மே ஸதா³ ஷண்முகோ²ஸ்து ॥

## அவதாரிகை.

இந்தச் சுலோகத்தில் கந்தப்பெருமான் கந்தமாதன பர்வதத்தில் வசிக்கும் காரணத்தைக் கூறுகின்றார்.

## பதவுரை.

யே நரா: - எந்த மனிதர்கள்,
மந்நிவாஸே - எனது வாஸஸ்தானமாகிய
கிரௌ - பர்வதத்தின் மீது,
அதிரூடா. - எப்போது ஏறுகின்றார்களோ,
ததா - அப்போதே,
தே - அந்த மனிதர்கள்,
ராஜதே பர்வதே - வெள்ளிமாமலையின் (கைலாயத்தில)
அதிருடா: - ஏறிவிடுகின்றார்கள்,
இதி ப்ருவன்னிவ — இவ்வுண்மையை உணர்த்துவதற்கோ என்று நினைக்கும்படி,
கந்த சைலாப்தி ரூட: - கந்தமாதன பர்வததின்மீது எழுந்தருளியிருப்பவரான,
ஸ: ஷண்முக: தேவ: - அந்த ஆறுமுககடவுளானவர்,
மே - எனது,
முதே - சந்தோஷத்தின் பொருட்டு,
ஸதா - எப்போதும்,
அஸ்து - இருக்கக்கடவர்.

## பொழிப்புரை.

கருணைக் கடலாகிய கந்தப்பெருமானைத் தரிசிக்க அவாவுடன் வரும் அடியவர்கள் எப்போது கந்தமாதன பர்வதத்தின்மீது ஏறுவார்களோ அக்கணமே கைலாயத்தையடையும் பாக்கியம் பெறுவார்கள். இவ்வுண்மையை உணர்த்துவதற்காகவே மலையில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் அந்த ஆறுமுகப்பெருமான் எனக்கு எக்காலத்தும் மகிழ்ச்சியை உண்டுபண்ணட்டும்.

महां भोधितीरे महा पापचोरे
मुनीन्द्रानुकूले सुगन्धाख्यशैले ।
गुहायां वसन्तं स्व भासालसन्तं
जनार्त्तिं हरन्तं स्रयामो गुहन्तम् ॥

(7) மஹாம் போ4தி4 தீரே மஹா பாபசோரே
முனீந்த்3ரானு கூலே ஸுக3ந்தா4க்2ய சைலே ।
கு3ஹாயாம் வஸந்தம் ஸ்வ பா4ஸா லஸந்தம்
ஜனார்த்திம் ஹரந்தம் ஸ்ரயாமோ கு3ஹந்தம் ॥

## பதவுரை.

மஹா பாபசோரே - கொடியபாவங்களைப் போக்கடிக்கின்ற,
மஹாம் போதிதீரே - பெரிய கடற்கரையின்கண்,
முனீந்த்ரானுகூலே - முனீஸ்வரர்களுக்கு அனுகூலமான,
ஸுகந்தாக்ய சைலே - அழகிய கந்தமாதன மலையில்மீதுள்ள,
குஹாயாம் - குகையின்கண்,
வஸந்தம் - வாசம் செய்பவரும்,
ஸ்வபாஸா - தனது திவ்விய தேஜஸ்ஸால்,
லஸந்தம் - பிரகாசிப்பவரும்,
ஜனார்த்திம் - அன்பர்களின் துக்கத்தை,
ஹரந்தம் - போக்கடிப்பவரும் ஆன,
தம் - அந்த,
குஹம் - குஹப்பெருமானை,
ஸ்ரயாம: - வழிபடுகின்றோம்.

## பொழிப்புரை.

பெரும் பாவங்களையும் போக்கடிக்கவல்ல புண்ணிய சமுத்திரக் கரையில் முனிவர்களுக்கு மகிழ்ச்சியைத் தாநின்ற கந்தமாதன பர்வதத்தின் குகையில் எழுந்தருளியிருப்பவரும், திவ்விய தேஜோ

மூர்த்தியும் அன்பர்களின் துன்பத்தை தீர்ப்பவருமான குஹக்கடவுளை நாங்கள் சரணமாக அடைகின்றோம்.

लसत्स्वर्णगेहे नृणां कामदोहे
सुमस्तोमसंछन्न माणिक्यमञ्चे ।
समुद्यत् सहस्रार्क तुल्य प्रकाशं
सदा भावये कार्तिकेयं सुरेशम् ॥

(8) லஸத் ஸ்வர்ண கேஹே ந்ருணாம் காம தோஹே
ஸுமஸ் தோம ஸஞ்சந்ந மாணிக்ய மஞ்சே ।
ஸமுத்யத் ஸஹஸ்ரார்க துல்ய ப்ரகாஸம்
ஸதா பாவயே கார்த்தி கேயம் ஸுரேஸம் ॥

## பதவுரை.

லஸத் ஸ்வர்ணகேஹே - பிரகாசிக்கின்ற பொன்மயமான திருக்கோயிலின்கண்,
ந்ருணாம் காம தோஹே - அடியவர்களின் அவாவை நிறைவேற்றுவதும்,
ஸுமஸ்தோம ஸஞ்சந்ந மாணிக்ய மஞ்சே - புஷ்பங்களால் அழகு செய்யப்பட்ட மஞ்சத்தின்மீது,
ஸமுத்யத் ஸஹஸ்ரார்க்க துல்யப்ரகாசம் - ஏக காலத்தில் ஆயிரக்கணக்கான சூரியர்கள் உதித்தால் எத்தகைய பிரகாசம் உண்டாகுமோ அத்தகைய பிரகாசமுடையவரும்,
ஸுரேஸம் - தேவர்களுக்கெல்லாந் தலைவருமாகிய,
கார்த்திகேயம் - கார்த்திகேயப்பெருமானை,
ஸதா பாவயே - எப்போதும் எண்ணுகின்றேன்.

## பொழிப்புரை.

பொன்மயமான திருக்கோயிலின்கண் அடியவர்களின் ஆசையைப் பூர்த்திசெய்வதும், அழகிய புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டதுமான மாணிக்க மஞ்சத்தின்மீது ஒரே காலத்தில் ஆயிரக்கணக்கான சூரியர்கள் உதயமானாற்போலப் பிரகாசிக்கின்றவரும், தேவர்களுக்கெல்லாம் தலைவருமான கார்த்திகேய ஸ்வாமியை நான் எப்போதும் தியானஞ் செய்கின்றேன்.

(தொடரும்.)

ஓம் குஹாய நம:

# கந்தர் திருவிளையாடல்

(53-வது பக்கத் தொடர்ச்சி)

இந்திரன் முதலிய இமையவர் பின்தொடர்ந்துவர நான்முகக் கடவுள் நலம்பலமல்கிய வைகுந்தமடைந்து ஆலயத்திற்குள் சென்று சங்கு சக்கிரபாணியாகிய துவாரபாலகன்பால் விடைபெற்று, பன்னகாசனன் வைகும் பேரவையடைந்து, நாராயணமூர்த்தியின் நற்றாட் கமலங்களை வணங்கி நின்றனன். கருமுகிலனைய மேனித் திருமகள் கொழுநன் கருணைசெய்து பிரமனுக்குப் பீடமளித்து, 'நான்முக! நின் படைப்புத்தொழில் இடையூறின்றி இனிது நடைபெறுகிறதா?" என்று வினவ, நான்முகன் "எந்தாய்! அறிவிற் சிறந்த அருந்தவர்களாகிய சனகாதி நால்வர்கள் என் மனத்தினின்றுந் தோன்றினார்கள். அவர்களை யான நோக்கி "மைந்தர்களே! இந்த சிருஷ்டித்தொழிலை யாற்றி இங்ஙனே இருத்திர்" என்ன, அவர்கள் அது கேட்டு நகைத்து, "ஐயா! பாசமாகிய சிறைப்பட்டு படைத்தற்றொழிலை யாம் புரியோம். ஈசனது இணையடியை யேத்தி இன்புறுவோம்" என்று கூறி நீங்கி, பெருந்தவத்தைச் செய்தனர். அத்தவத்திற்கு இரங்கி ஆலமுண்ட அண்ணலார் தோன்றி "நும் விருப்பம் யாதென" முனிவர் "ஆதிநாயக! வேத வுண்மையை விளம்புதி" என்றனர். இறைவன் வெள்ளியங்குன்றில் தென்திசையில் ஓர் ஆலவிருட்சத்தின்கீழமர்ந்து நால்வர்க்கும் நான்மறைப்பொருள்களை நவின்று நீங்கினர். அதனால் சனகாதி நால்வர்க்கும் மனம் ஒருமை யடையாமையால் வருந்தி மீளவும் கண்ணுதலை வேண்டிக் கடுந்தவமாற்றினர். பின்னர் அவர்கள் கயிலையை யணுகி எம்பிரானை வணங்கி "மனமடங்குமாறு உபதேசித்தருளல் வேண்டுமென" அவர்களது பரிபக்குவத்தை உணர்ந்து பிறைசூடிய பெருமான் ஆகமத்தினுட்கருத்துக்களாகிய சரியை கிரியை யோகமென்னும் முத்திறத்தையும் உபதேசித்து ஞானபாதத்தை விளக்குமாறு சின்முத்திரையைக் காட்டி மௌனநிலையையுணர்த்தித் தானும் மௌனத்துடன் வீற்றிருப்பா

ராயினர். அதுகண்ட அருந்தவரும் செயலற்று சிவயோகத்தில் அமர்ந்தனர். சிவபெருமான் ஒரு கணம் யோகத்தில் அமர்ந்துள காலம் நமக்கும் ஏனையோர்க்கும் பற்பல யுகங்களாயின; உயிர்கள் இச்சையின்றி ஆண்பெண் சேர்க்கையின்றி வருந்துகின்றன; அதனால் அடியேனுடைய படைப்புத்தொழில் அழிந்தது. இது நிற்க, சிவமூர்த்தியின்பால் பற்பல வரம்பெற்றுத் தருக்கிய சூராதியவுணர்கள் எமக்குத் தினந்தோறும் ஏவலைத்தந்து பொன்னுலகத்திலும் துன்பத்தை விளைவித்தனர். இந்திரன் மகனையும் ஏனையதேவர்களையும் தேவமாதர்களையும் சிறையிட்டுத் துன்புறுத்துகின்றனர். சூரபன்மன் தேவர்களை ஏவல்கொண்டு ஒப்பாரு மிக்காருமின்றி அண்டங்கள் ஆயிரத்தெட்டையும் அரசாளுகின்றனன். இவைகளையெல்லாம் அறிந்தும் அறியாதவர்போல் அரனார் சிவயோகத்தில் அமர்ந்துளார். இனி செயத்தக்கது யாது? அதனை விரைந்து விளம்புதல் வேண்டும்" என விளம்பினன். இவைகளைக்கேட்ட திருமகள் நாயகராம் நாராயணர் கூறுவார்.

"கமலாசன! எல்லா உயிர்களுக்கும் உயிர்க்குயிராய் அருவமும் உருவமும் உருவாருவமும் ஆகிய எல்லா உயிர்கட்கும் எல்லாவுலகங்கட்கும் மூலகாரணமாய் நின்ற மூவர் முதலவனும் முக்கட்பெருமான் மோனநிலையைக்காட்டி நிற்பாரேல் உலகில் எவர்கள்தான் இச்சையுற்று மாதர் தோளைத்தழுவுவர்?

ஆவிக ளனைத்து மாகி யருவமா யுருவ மாகி
மூவகை யியற்கைத் தான மூலகாரண மதாகுந்
தேவர்கள் தேவன் யோகின் செயன்முறை காட்டு மென்னில்
ஏவர்கள் காமங் கன்றித் தோன்மைபோ லிருக்கு நீரார்.

சிவமூர்த்தியின்பால் பற்பல நலன்களைப் பெற்ற தக்கன் ஊழ்வினை வயப்பட்டு செய்நன்றி மறந்து சிவமூர்த்தியை நிந்தித்து ஒரு பெரும் வேள்வியைச் செய்ய, அச்சிவாபராதியாகிய தக்கன்பால் சேர்ந்து இருந்ததால் நமக்கு ஏற்பட்ட தீவினையைத்தீர்த்து இன்பத்தை நல்குதற்பொருட்டு எம்பிரானார் திருவுளங்கொண்டார். சூரபன்மனுக்கு அளவில்லாத ஆற்றலை நல்கியதும், அமரர்கள் அணுகுதற்கரிய நிலையில் சனகாதிகளுக்கு சிவயோகநிலையைக்காட்டி கொன்றை சூடிய குன்றவில்லி உயிர்களுக்கு இன்னலை விளைவித்ததும் என்னென்று ஆராய்ந்து நோக்கின், பேரருள் பெருக்கேயன்றி பிறிதொரு

செயலுமுண்டோ? முக்கட்பெருமான் முனிவருக்கு உணர்வுகாட்டும் மோனத்தினின்றும் நீங்கி இமவரை யீன்ற எம்பெருமாட்டியை மணந்துகொள்ளுமேல் படைத்தற்றொழில் இனிது நடைபெறும். உமாமகேஸ்வரர்பால் இனி ஓர் குமாரன் தோன்றுமேல் சூர்முதல் அவுணரையழித்து இன்பமுண்டாக்கும் உலகமெல்லாம் தொன்மை போல் நன்மைபெற்றுய்யும் இவைகளெல்லாம் இனிது நிகழுமாறு ஓர் உபாயத்தை யுரைப்பன். அம்புய! உலகத்தில் எத்திறப்பட்டோரும் காமுறுமாறு மலர்க்கணைகளை ஏவும் மன்மதனை ஏவி ஈசனார்மேல் ஐங்கணைகளைப் பொழியச்செய்யின் சிவமூர்த்தி யோகத்தினின்றும் நீங்கி அகிலாண்டநாயகியை மணந்து சூராதிகளையழிக்கும் திருக்குமாரனை நல்குவர்; இதுவே செயத்தக்கது" என்றனர்.

அதுகேட்ட பிரமன் "அண்ணலே! நன்று நன்று; இது செய்யின் எண்ணிய கருமம் கைகூடும்; சமயத்திற்குத் தக்கவாறு கூறினீர்" என்றுகூற, நாராயணர் "வாணிகேள்வ! நீ உடனே மதனனை யழைத்து மதி நதி மௌலிபால் அனுப்புதி" என்றனன். மலரவன் மகிழ்ந்து மாயவனைவணங்கி விடைபெற்று இந்திராதி இமையவருடன் தனது மனோவதி நகரையடைந்து பதுமபீடமிசை வீற்றிருந்தனன்.

## காமதகனம்.

மலர்த்தவிசின்மீது வீற்றிருந்த பிரமதேவன் மலர்க்கணைக் கிழவனாகிய மன்மதனை வருமாறு நினைந்தான். மாயவன் மகனும் மன்மதன் உடனே தனது பரிவாரங்களுடன் வந்து நான்முகனை வணங்கி "அண்ணலே! அடியேனை நினைத்த காரணம்யாது? கருணைபுரிந்து கட்டளையிடுவீர்" என்றனன் மலரவன் "மதன! கங்கையை முடித்த கண்ணுதற்கடவுள் மலையரையன் பயந்த மகேஸ்வரியை மணந்துகொள்ளுமாறு நின் மலர்க்கணைகளையேவி சிவமூர்த்தியினது மோனநிலையை யகற்றுதி; எம்பொருட்டாக இக்கருமத்தை நீ செய்தல் வேண்டும். தாமதியாது செல்லுதி" என்றனன்.

> கங்கை மிலைச்சிய கண்ணுதல் வெற்பின்
> மங்கையை மேவநின் வாளிகள் தூவி
> அங்குறை மோன மகற்றினை யின்னே
> எங்கள் பொருட்டினில் ஏகுதி யென்றான்

பிரமதேவன் இவ்வண்ணங்கூறிய கொடுமையானதும், விடத்திற்கு நிகரானதுமாகிய தீச்சொல் மன்மதனுடைய செவிவழிச்

சென்று அவனுடைய உள்ளத்தை யுடனே சுட்டுவிட்டது. சிவபிரானது யோகநிலையை யகற்றவேண்டு மென்ற சொல்லே காமனுடைய உள்ளமுழுவதும் சுட்டுவிட்ட தெனனில் பிறைசூடிய பெருமான் அவனுடைய உடம்பை எரிப்பது ஓர் அற்புதமோ? பிரமனது சொல்லைக்கேட்ட மதனன் தனது இருகரங்களாலும் விரைந்து செவிகளைப் பொத்தி ஐந்தெழுத்தையும் மனத்தில் நினைந்து 'ஹரஹர!' என்று கூறி "அளப்பரும் பாவத்தைத்தரும இத்தீய மொழியைக் கேட்கலாயிற்றே" என்று உளம்வருந்தி, அனலில் வாட்டிய தாமரை போல் வாடியமுகத்துடன் பிரமனை நோக்கிப் பினவருமாறு பேசலாயினன்.

"அண்ணலே! தீயவர்களாயினும் தம்மிடம் வந்தடுக்கில் பெரியோர்கள் உய்யும்வழியாகிய நன்மையைப் புகல்வர் அங்ஙனமிருக்க, அறிவின்மிக்க நின்னைவந்தடுத்த என்னிடம் எக்காரணத்தாலும் உய்ய முடியாத இத்தீய வசனத்தை யுரைத்தனை. என்னிடம் உனக்கு அருள் ஒரு சிறிதும் இல்லை போலும்; என்னுடைய மலர்க்கணைகளால் மயங்காதவர் உலகில் ஒருவருமில்லை. பூதேவியையும் பூந்தவிசில் வைகுஞ் ஸ்ரீதேவியையும், ஏனைய மாதர்களையும் புணர்ந்து போகத் தழுந்துமாறு என் பிதாவாகிய நாராயணமூர்த்தியை மலர்க்கணைகளால் மயங்கச் செய்தேன். வெண்டாமரைமிசை வீற்றிருக்கும் பாமகளைப் புணருமாறும், திலோர்த்தமையைக் கண்டு உள்ளத்தாற் புணருமாறும், உனனை எனது கணைகளால் வெற்றி பெற்றேன். இத்துடனமையாது திருமகளை நாராயணர் மார்பில் வைக்கவும், கலைமகளைத் தாங்கள் நாவில் வைக்கவும் செய்தேன். அகலிகையைக் கண்டு காமுறச்செய்து இந்திரனுடைய உடல்முழுவதும் கண்களாகச்செய்தது எனது மலர்க்கணைகளின் வல்லபமன்றோ? தனது பாகனாகிய அருணன் பெண்ணுருவடைந்தபோது அவளைக் கண்டு மயங்கச்செய்து சூரியனைப் புணருமாறுசெய்தது என் கணைகளேயன்றோ? குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரனை குருவின் பத்தினியாகிய தாரையைப் புணர்ந்து புதனென்னும் புதல்வனைப்பெருமாறு செய்தேன். வேதங்களின் நுட்பங்களையுணர்ந்த நல்லறிவுடைய தேவர்கள் யாவரையும் என் கணையால் மயக்கி மாதர்களுக்குக் குற்றேவல் புரியுமாறு செய்தேன். மறை முழுதுணர்ந்த அகத்தியர், அத்திரி, கௌதமன், அறிவிற் சிறந்த காசிபர், வசிட்டர், மரீசி முதலிய முனிச்சிரேட்டர்களது தவவலியை இமைப்பொழுதில் நீக்கி என்வசப்

பட்டுத் தவிக்கச்செய்தேனன்றே ? நால்வகை வருணத்தாராகிய மனிதர்களையும் பெண்மயக்குற்றுப் பீடழியுமாறு செய்தேன். என் வசப்படாது என் கணைகளை வென்றவர் மூவுலகிலும் யாருளர் ? எத் திறப்பட்டவரையும் வெற்றிபெற்றேன். ஆயினும் சிவமூர்த்தியை வெல்லுமாறு நினைத்தற்கும ஆற்றலுளதோ ? நாரணாதி தேவர்களை மயக்கி வெற்றிபெறலாமேயன்றி நதிசூடிய ஞானமறை நாயகனும் சிவபரம்பொருளை எனது கணையால் மயக்குவது முடிகின்ற காமமோ? என்னே நின் கருத்து ? மாற்றம மனங்கழிய நின்ற மகேஸ்வரனை மயக்கவேண்டுமென்று மனத்தால் நினைக்கினும் உய்வுபெறமுடியாது அனலே வடிவாகிய அரனார்மேல் எனது மலர்க்கணைகளை விடுத்தாலும் அக்கணைகள் அவரிடம் செல்லுமோ ? சிவமூர்த்தியினது கரதலும் அக்கினி ; நகையிலும் அக்கினி ; கண்ணிலும் அக்கினி ; நடையிலும் அக்கினி ; அனற்பிழம்பாகிய அமலனிடம் யான் சென்றால் உய்யும வகையும் உளதோ ? வேண்டுதல் வேண்டாமையிலாத விமலனை யாரே மயக்கவல்லார் ? ஏனைய தேவர்களைப் போல் அவரையும் எண்ணினைபோலும; சண்டமாருதத்தை எதிர்த்து ஒரு பூளைப்பூ வெற்றிபெறுமேயாமாகில் வெண்ணீறணிந்த விடையவனை நான் வெற்றி பெறுதல் கூடும். சிவமூர்த்தியை எதிர்த்து அழிந்தவரேயன்றி உய்வு பெற்றவர் யாரேனுமுளரோ? திரிபுர சங்காரகாலத்தில் அரிமுதல் அமரர்கள் குற்றேவல்புரிய முக்கட்பெருமான் புன்கையாலேயே புரமூன்றை ஒரு கணப்பொழுதில் எரித்ததை மறந்தனைபோலும். மூவர் முதல்வ ! தேவ தேவ ! கண்ணுதற்பரம ! என்று துதித்து வழிபாடு செய்த மார்க்கண்டேயரைப் பற்றுமாறு அழல்போல் சினந்துவந்த கூற்றுவனை நம்பன் இடது திருவடியால் உதைத்த அருட்டிறத்தை யறிந்திலைபோலும். முன்னொரு நாள் தாங்களும் தண்டுழாயலங்கல் தாமோதரரும் " பரம்பொருள் யான் " என்று வாதிட்டபோது ஆங்கு வந்த சிவமூர்த்தியை நீ மதியாதிருக்க நினது ஐந்தலைகளில் ஒரு தலையை சிவனார் நகத்தாற் கிள்ளியெறிந்ததை யுணர்ந்திலைகொல்? சலந்தராதி தானவர்கள் சங்கரனாரைப் பகைத்து மாண்டதை யறியாதாருமுளரோ ? நின் மகனாகிய தக்கன் புரிந்த வேள்விசாலையிலிருந்தோர் யாவரும் விடையவன்பால் தோன்றிய வீரபத்திரரால் மிகவுந் துன்புற்று வருந்தியதைப் பார்த்திருந்தனையே ? அமிர்தமதனம் புரிந்தஞான்று நாமெல்லாம் நடுநடுங்கி பயந்தோடுமாறு தோன்றிய ஆலகால விடத்தையுண்டு நம்மைக்காத்தரு

ளியது அப்பெருமானது அருட்டிறமேயன்றோ? உலகை யழிக்க வந்த கங்காதேவியை சடைமிசையேற்று தண்ணருள்புரிந்தது அச்சிவமூர்த்தியேயன்றோ? தாருகவனத்திருடிகள் அபிசார வேள்வி செய்து அனுப்பிய யானை, புலி, மான், முயலகன், பாம்பு முதலியவைகளைச் சிவனார் உரியாகவும், போர்வையாகவும், ஆபரணமாகவும் அணிந்துளதை நீ பார்த்திலையோ? சர்வசங்காரகாலத்தில் கறைமிடற்றண்ணல் தனது நெற்றிக்கண்ணிலிருந்து விழும் ஒரு சிறு பொறியால் உலகங்களெல்லாம் நீறாகி யழிகின்ற பெருந்திறத்தை நீ யறிந்திருந்தும் மறந்தனையோ? இத்தகைய போராற்றலையுடைய பிறைமுடிப்பெருமானை நாயினுங் கடைப்பட்ட அடியேன் எனது கரும்புவில்லைக்கொண்டு மலர்க்கணையேவி ஒருபோதும் போர்புரிய இசையேன். பிழைக்கவேண்டுமென்று நினைப்பவர் யார்தான் இச்செயலைச் செய்வார்? உலகங்களையெல்லாம் படைத்து காத்து அழித்து மறைத்து அருளும் தனிப்பெருந்தலைவனை நானோ மயல் செய்ய வலியுடையேன்? நன்று; நன்று; நினைத்தற்கும் தகுதியில்லேன்" என்று பற்பல வசனங்களை யுரைத்தான்.

இவ்வாறு மன்மதன் மறுத்துக் கூறியதை மலர்மிசை வைகும் நான்முகன் கேட்டு உளம்வருந்தி சிறிதுநேரம் ஆராய்ந்து பேருயிர்ப்புடன் உரைக்கலாயினன். "மதனா! ஒருவராலும் வெல்லுதற்கரிய சிவபெருமானது அருட்பெருங்குணங்களை வெள்ளறிவுடைய விண்ணவரிடம் விளம்புவதுபோல் என்னிடம விளம்பினை. நீ யுரைத்தவெல்லாம் உண்மையே; தனக்குவமையில்லாத கயிலைநாயகனை வெல்வது எளிதன்று; எவர்க்கும அரியதே. ஆயினும், தன்னையடைந்தோர் தாபத்தைத் தவிர்க்கும் தயாபரனும சிவமூர்த்தியினது நல்லருளால் இக்கருமம் முடிவடையும். அவனருளை பெறுதாரால் முடித்தற்கரியதாம். நினைந்து பார்க்கில் இக்கருமத்தை முடித்தற்கு நீ தான் சிறந்த காரணனும். அவனருளின்றி யணுவு மசையாது. எல்லாருடைய செயலும அவன் செயலே. நீ யிப்போது கண்ணுதலை மயக்கச் செல்லுவதும் அவருடைய செயலேயாகும். தேவர்களெல்லாம் குழுமியிருந்தபோது சிவபெருமான் யட்சனைப்போல்வந்து ஒரு துரும்பை நிறுத்தி அதனை வாயுவினாலும் அக்கினியினாலும் ஏனைய தேவர்களாலும் அசைக்கவும் எரிக்கவும் பிறசெய்யவும் முடியாது திகைத்திருக்குமாறு செய்த பெருந்திறத்தையறிந்திருந்தும் நம்மால் ஒரு கருமம் முடியுமென்பது நாணத்திற்கிடமன்றோ? நாம் பேசுவதும்

நடப்பதும் பார்ப்பதும் செய்வதும் அவன் திருவருட்செயலே. ஆதலால் நீ கரும்புவில்லை வளைத்து பூங்கணைகளை ஏவுமாறு செல்லுதி; இதுவும் அவனருளே; ஐயமில்லை. இது சாதம்.

இஃதன்றி ஆற்றவொணுத் துன்பங்கொண்டு யாராவது ஒருவரையடுத்து "உதவிசெய்" என்று இரந்தால் அவருடைய துன்பத்தைக் கண்டு இரங்கி அவருடைய துன்பத்தை களையாது தன்னுயிரைப் பெரிதென்றெண்ணி உயிருடனிருத்தல் தருமமோ? அது அறத்தின் வழி நின்றூர்க்கு ஏற்றதாகுமோ? ஒருவனுக்கு ஒரு துன்பம் நேர்ந்தால் அத்துன்பத்தைத் தன்னால் நீக்க முடியுமேல் அவன் சொல்லாமுன்னம தானே வலிந்து துன்பத்தை நீக்குதல் உத்தமம; அவன் வந்து இத்துன்பத்தை நீக்குதல் வேண்டுமென்று சொன்னபின் நீக்குதல் மத்திமம்; பலநாள் வேண்டிக் கொள்ள மறுத்தும் பின்னர் நீக்குதல் அதமம். யாராவது இடருற்றனரேல் அவரது இடரை யகற்றுதற்பொருட்டு தன்னுயிரை விடுதலுந் தருமமே. தன்னுயிர்க்குப் பயந்து அத்துன்பத்தை நீக்க மறுப்பரேல் பாவமட்டுமல்ல, அகலாத பழியும் வந்துசேரும்.

ஏவ ரேனும் இடருற்றன ராகில்
ஓவில் துயையோர் முளரேல் அதுமுடித்தற்
காவி விடினும் அறனே மறுத்துளரேல்
பாவ மலது பழியும் ஒழியாதே

பிறர்க்குதவி செய்யாது கழித்தோன் வாழ்நாள் வீணாகும். தண்டுழாய் முடியோனுடன் வாதியற்றிய ததீசிமுனிவரை தேவர் கோமான் குறையிரப்ப, விருத்தாசுரனை வதைக்கும் பொருட்டுத் தனது முதுகெலும்பைத்தந்து ததீசிமுனிவர் உயிரிழந்த செய்தியை நீ கேட்டதில்லையோ? பாற்கடலில் எழுந்த வடவாமுகாக்கினியனைய விடத்தினைக்கண்டு நாம் பயந்தபோது திருமால் நம்மைக்காத்தற் பொருட்டு அஞ்சேல் என்று கூறி அவ்விடத்தின எதிரில் ஒரு கணப்பொழுது நின்று தமது வெண்ணிறம் பொருந்திய திருமேனி கருமை நிறத்தை யடைந்ததை நீ பார்த்ததில்லையோ? பிறர்பொருட்டுத் தமதுயிரை மிகச் சிறிய பொருளாக எண்ணுவோர் உலகில் புகழ் பெற்று வாழ்வார்கள். யாம் சூரபன்மனால் மிகவும் வருந்தினோம். அவ்வருத்தம் தீரும்படி கண்ணுதற்பெருமான் ஒரு புதல்வனை தோற்றுவித்தற்பொருட்டு நீ பஞ்சபாணங்களுடன் செல்லவேண்டும். எமது வேண்டுகோளை நீ மறுத்தல தகுதியன்று" என்று பலவாராக பிரமன் கூறினன்.

(தொடரும்.)

உ

ஓம் குஹாய நம :

# கதிர்காமம்

"கதலி சூதத் தினிற் பயிலு மீழத்தினிற்
கதிர காமக் கிரிப் பெருமாளே"

கதிர்காமக்ஷேத்திரத்தைப் பற்றியும் அதன் வரலாறு வழி முதலியவற்றையும் அறிந்துகொள்ளவேண்டுமென்று பல அன்பர்கள் விரும்பிப் பன்முறையுங் கேட்டுக்கொண்டதனால் இதனை ஒருவாறு விளக்கலானேன்.

முன்னொருகாலத்தில் வாயுதேவனாற் பறித்தெறிந்த மேருகிரியின் சிகரங்கள்மூன்றனுள் ஒன்று இலங்கை மண்டலம். அதற்கு தக்கிண கயிலை, பொன்னகரம், ஈழம் (சிலோன்) முதலிய பல நாமங்களுள. இம்மண்டலத்தை சூரபன்மன், இராவணன், குபேரன், மது, உக்கிர வழுதி, வீடணன், தொண்டமானிளந்திரையன், நல்லியக்கோடன், குளக்கோடன், உக்கிரசோழன், வாலசிங்கன், சிங்கையாரியன், அரசகேசரி' பரராசசேகரன், செகராசசேகரன், முதலிய பற்பல மன்னர் அரசாண்டனர். ஆகமம் ஸ்மிருதியாதி வடமொழி நூல்களும், தேவாரம் திருப்புகழாதி தென்மொழி நூல்களும் இதனைப் புகழ்கின்றன. இவ்விலங்கை விராட்புருடனுக்கு இடைநாடியாயிலங்குவது. திரிகூடம், கேதீஸ்வரம், கந்தமாதனம், ஏமகூடம், நீலம், சுவேலம், சிவனொளிபாதம், செங்கடம. வள்ளி, காளபைரவம், நகுலம், மேந்தலை, மகானுவரம், சீவர்த்தனம், உகந்தை, கதிரை முதலிய மலைகளாலும், மாவலிகங்கை, கருடகங்கை, காவிரிகங்கை, மாணிக்க கங்கை, பாலாவி, பாபநாசம், நவகங்கை, மாயவனாறு, கழுநீர்க் கங்கை, வேலாயுத புட்கரணி, கன்யாகங்கை, நகுலம், சமுத்திர தீர்த்தம், பாதலகங்கை, கல்லாறு, நவகிரி, திருவடுநிலை. யமுனரி, நிலாவிரி, வாமனம் முதலிய தீர்த்தங்களாலும், கண்டி கொழும்பு முதலிய நகரங்களாலும் அலங்கரிக்கப்பட்டு காண்பார் கண் கவருங்கவினையுடையதாய் விளங்குவது இத்தீவு. சூரபன்மனுடைய வீரமகேந்திர புரியைச் சூழ்ந்திருந்த எட்டுத்தீவுகளில் இது வடபுறத்தில் இருந்தது.

இத்தகைய இலங்காத்வீபத்தின் தென்கோடியில் மகாபுனிதந் தங்கிய இடத்தில் விளங்குகின்றது கதிர்காம க்ஷேத்திரம்.

சூரபன்மன் தேவர்களையும் தேவமாதர்களையுந் இந்திர குமாரனாகிய சயந்தனையுஞ் சிறையிட, அதனை மீட்டருள்புரியுமாறு குமாரக்கடவுள் இலக்கத்தொன்பான் வீரர்களுடனும் பூதவெள்ளங்களுடனும் கயிலையினின்றும் புறப்பட்டு, தாரகனைக்கொன்று செந்திலம்பதி சென்று அங்கிருந்து கடலைக்கடந்து இலங்கைமண்டலத்தையடைந்து அதன் தென்கோடியில் சென்றவுடனே, நான்முகனும் நாரணனும் பணிந்த, "எம்மையாட்கொள்ளும் பொருட்டு எழுந்தருளிய எந்தையே! சூரபன்மன் வாழும் மகேந்திரபுரி கீசர்களுக்கிருப்பிடமாதலால் ஆங்கு தேவரீர் செல்லுவது தகுதியன்று" என்றுகூற, கதிர்வேலண்ணல் தேவகம்மியனாகிய விசுவகருமனைத் திருநோக்கஞ் செய்தருளி, "இங்கு ஓர் நகரமைத்தி" என்னலும், உடனே அவன் வானளாவிய கோபுரங்களும், மணிமண்டபங்களும், நெடுந் தெருக்களும், மத்தியில் எம்பெருமானிருத்தற்கு அழகிய திருக்கோயிலுமாக ஏமகூடம் எனனும் ஓர் நகரை உண்டாக்கினான் (தங்கத்தால் செய்ததால் அதற்கு ஏமகூடம் எனப்பெயருண்டாயிற்று) முருகவேள் அந்த ஏம கூடத்தில் தங்கி இருந்து சூராதிகளை யழித்து இந்திராதி தேவர்களைக் காத்தருள் புரிந்தனர். இந்த ஏமகூடந்தான் கதிர்காமமாகும். இத்தலத்தே முருகப்பெருமான ஆறுதிருமுகங்களும், பதினெட்டுத் திருக்கண்களும், மணமருவு கடப்பமலர் மாலையணிந்த திருமார்பும், வலத்திருக்கரங்களிலே கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல், அபையம் என்பவும், இடதிருக்கரங்களிலே தாமரை, கண்டாமணி, மழு, தண்டு, வில், வரதம என்பவும் அமைந்த பன்னிரு திருப்புயங்களும்கொண்டு, கோடி சூரியப் பிரகாசமான திருமேனியுங் கொண்டு வீரமூர்த்தியாய் இலக்கத்தொன்பான் வீரர்களும், ஈராயிரம் பூதவெள்ளங்களும், அரியயனாதி அமரர் குழாங்களும் சூழ வீற்றிருந்தருளினர். பகவான் இத்தலத்தில் போர்க்கோலத்துடன் எழுந்தருளியிருத்தலால அத்திருக்கோலத்தை மானுடராகிய சிறியேம் தரிசிக்கவியலாதென்று மூலத்தான மடைக்கப்பட்டு மூர்த்தியும் அவ்வியக்கமாயினர்.

கதிர்காமம் என்பதன் பொருள் : கதிர்-ஒளி, காமம் - இன்பம் எனவே ஆன்மாக்களுக்குச் சிவஞானவொளியினுற் பேரின்பத்தை யளிப்பது என்பதாம் பாஞ்சுடராகிய சுப்பிரமண்யமூர்த்தி இன்பத்

துடன் உறைவது எனவுமாம். கதிர் - சூரிய சந்திரர்களால், காமம் - விரும்பிப் பூசிக்கப்பட்டதெனவும் பொருள்படும். இத்தலத்திற்கு தக்கிண கந்தபுரி, ஏமகூடம், அம்சுகாமம், கதிரை, பூலோககந்தபுரி, கோட்டம், வன்னிமங்கலம், காரிகாப்பு, வரபுரி, பஞ்சமூர்த்திவாசம், சகல தேவோபாசியம், கதிக்கேணி, சகல சித்திகரம், அகத்தியபிரியம், சிதாகாசம், குகைத்தலம், தகராலயம், பிரமசித்து, மகத்து, விவிக்தம், ககனம், பரிசுத்தம், அற்புதம், பாசறை, அம்பலம், பரவியோமம், இரண்மயகோசம், அந்தராகாசம், அவ்யக்தமூர்த்திபுரி, கதிர்காமம் எனப் பற்பல திருநாமங்களுள. இந்த க்ஷேத்திரத்தில் குமாரக்கடவுள் கணப்பொழுதும் நீங்காதிருந்து, இச்சாசக்தியாகிய வள்ளியம்மையாருடனும், கிரியாசக்தியாகிய தெய்வகுஞ்சரியம்மையாருடனும், அமர்ந்து பற்பல திருவிளையாடல்களைப் புரிந்தருள்வார். தேவர் முதலிய கணர்கள்தான ஆண்டவனை உள்ளே ஆராதிக்கிறார்கள்.

அநுமார் கணையாழியைப்பெற்று இராமமூர்த்தியின்பால் விடைபெற்று சீதையைத் தேடிக்கொண்டு இலங்கைக்குச் சென்றபோது இக்கதிர் காமமூர்த்தியாகிய கந்தவேளைவழிபட்டு முருகனருள் பெற்றுச்சென்றனர். இதனை அருணகிரிநாதர்

அருட்போற் றிருவாழி மோதிர
மளித்துற் றவர்மேல் மனோகர
மளித்துக் கதிர்காம மேவிய பெருமாளே

—(உ௫௧௧) திருப்புகழ்.

இத்தலத்தின் பெருமை அளவிடற்கரியது. அருணகிரி சுவாமிகளால் பாடப்பெற்ற 13 திருப்புகழ் பாடல்களுள.

படைவீட்டுத்தலங்களாகிய திருப்பரங்குன்றமுதலிய ஆறு தாரதலங்களினும் மேலாய துவாதசாந்தத்தலமாய் விளங்குவது இக்கதிர்காமக்ஷேத்திரம். அன்றியும் சில தலங்களிலே கோயில் என்னும் சிதம்பரம் ஆகாயலிங்கமுடைத்தா மிரகசியத்தலமானதுபோல், இக்கதிர்காமமும் அங்ஙனமே சோதிவடிவினரா யெவரானும் விரும்பத்தகுந்த பரவியோமமூர்த்தி, எவர்களானுங் காண்டற்கரியாராய் விளங்கலின் இரகசியத்தலமாய்விளங்கும், இங்ஙனுள்ள தீர்த்தங்களோ மாணிக்க கங்கை முதலாக அளவற்றன. மலைகளோ : கதிரைமலை, வள்ளிமலை,

தெய்வயானைமலை, காளபைரவமலை, முதலாக எண்ணிலாதன. சிவ கணேச உமாவீரபைரவ மகாசாத்த நவலக்க வீர புட்கலேச ராம காளிய சுராரி துர்க்கை முதலிய பலமூர்த்திகள் முருகவேளை உபா சித்து நாற்புறங்களினும் வசித்துளார்கள்.

## கதிர்காம யாத்திரை.

இத்தகைய அற்புத க்ஷேத்திரத்திற்குச் செல்லவேண்டுமென்று நெடுநாளாக அடியேனும் எமது திருப்புகழ்சபையோரும் அன்புகூர்ந் திருந்தோம். ஸ்ரீமுகஞு ஆடிமீ 11-உ (26-7-'33) புதன்கிழமை திருப்புகழ் கோஷ்டியுடன் புறப்பட்டு தனுஷ்கோடியைச் சார்ந்துள்ள மணடபம் போய் ஆங்கிருந்து தனுஷ்கோடியில (28-7-'33) மாலை 4-30 மணிக்குக் கப்பலேறினோம். இரவு 8-மணிக்கு இலங்கையின் கரையாகிய தலைமனார் சென்றோம். தனுஷ்கோடிக்கும் தலைமன் னார்க்கும் ஏறக்குறைய 24 மைல் என்பர். பின்னர் தலைமன்னாரில் உடனே ரயிலேறி மறுநாள் காலை $7\frac{1}{2}$-மணிக்கு கொழும்பு சேர்ந் தோம். 30-7-'33-ல் கொழும்பிலிருந்து புறப்பட்டு காலை 8-மணிக்கு ரயிலேறி காலி மார்க்கமாகப்போய் பகல் $1\frac{1}{2}$-மணிக்கு மாத்திரைக்கு போனோம், அங்கே இரண்டு கூட்டத்தார்கள் இருபுறததிலே நின்று ரயிலடியிலேயிருந்து "எங்களிடம் வந்து சாப்பிடுங்கள்" ;" எங்க ளிடம் வாருங்கள்" என்று உபசரிக்கும் காக்ஷி மிகவும் நன்றாக இருக்கும். அவர்கள் கொடிகளுடன பரிவோடழைதது உணவு தரு கிறார்கள். உணவு உண்டவுடன் காபி முதலிய பானங்களைத்தருகி றார்கள். மாத்திரை வரையிலுந்தான ரயில் அங்கிருந்து 75 மைல் பஸ்மூலமாக திசைமாறு என்ற ஊருக்கு மாலை 6-மணிக்குச் சேர்ந் தோம். அங்கிருந்து கதிர்காமம் சறேறக்குறைய 13 மைல். திசை மாறுவிலிருந்து இரவு 7-மணிக்குப் புறப்பட்டு கால்நடையாக இரவு 2-மணிக்குக் கதிர்காமம் சேர்ந்தோம். திசைமாறுவிலிருந்து கதிர் காமம் போகிறவரை பெருங்காடு; பள்ளமும் மேடுமான வழிதான். சாமான்களை ஏற்றிக்கொண்டு சிலவண்டிகள் போகின்றன ஆனால் எதிரில் வண்டிவந்துவிட்டால் வண்டி ஒதுங்க இடமின்றி சிரமப்படு கின்றனர். சிங்களவாதான் வண்டி ஓட்டுகின்றனர் அவர்கள் வண் டியை கர்தகை என்கின்றனர். அடாந்த காடு; இருபுறத்திலும் காண்பதற்கு பயங்காமாயிருக்கிறது.

ஜனங்கள் திசைமாறுவிலிருந்து கதிர்காமம் போகிறபோதும் திரும்பி வருகிறபோதும், கதிர்காமத்தில் வசிக்கும்போதும் வாய் ஓயாமல் ஹரோ ஹரா ஹரோ ஹரா என்று கூவி ஓலமிடுகின்றனர். பெரும்பாலும இரவிலேயே செல்லுகின்றனர்; மிருகாதிகள் நிறைந்த காடு; வானளாவி வளர்ந்த தருக்களால் அக்காடு வளம்பெற்றுளது; ஆடிமாசம் அமாவாசையிலிருநது பௌர்ணமி வரைக்கும் கதிர்காமத்தில் உத்சவம்; அந்தக்காலத்தில்தான் செல்லமுடியும்; ஏனையகாலங்களில் செல்லமுடியாது என்கின்றனர்; ஆடி பௌர்ணமியன்று தீர்த்தவாரி; அதறகுமேல் ஒருநாள்கூட அங்கு தங்கக்கூடாதென்கின்றனர் அந்தப் பதினைந்துநாளும் ஜனங்கள் இலட்சக்கணக்கான அன்பர்கள் ஹரோ ஹரா எனற முழக்கத்துடன போவதும் வருவதுமாக இருக்கிறார்கள். அநத காக்ஷி காண்பதற்கு இனிமையாயிருக்கும்.

கதிர்காமமானது அந்த பெருங்காட்டின் நடுவில் மாணிக்க நதியின்கரையிலுள்ளது. அந்த நதி தெள்ளிய நீரால் காண்பார் கண்களைக்கவரும் கவினுடையதாய் எக்காலத்தும் நீரோடுவதாய் ஊசி வீழ்ந்தாலும் தெரியக்கூடிய அத்துணைப் பரிசுத்தமுடையதாய் விளங்குகிறது இதனை அருணகிரியாரும

"மணிதரளம்வீசி யணியருவி சூழ
மருவுகதிர்காமப் பெருமாள் காண்"

— (திருமக) திருப்புகழ்.

அத்தலத்தில் ஓலை வீடுகளும், இரண்டு மூன்று சத்திரங்களும் உள; இரண்டே தெருக்கள்தான். கதிர்காமக்கோயில் ஒரு மதிளுக்கு மத்தியில் இலகுகின்றது; ஓட்டுக்கோயில்தான். அது மூன்று பிரிவாகவுளது. ஒரு பிரிவில்தான் தரிசனைக்குப் போகும் அன்பர்கள் நிற்கிறார்கள். அதற்கடுத்த பிரிவில் வரிசையாக முருகக்கடவுள் திருவுருவம் பொறித்த திரைகளைத் தொங்கவிட்டுள. மூன்றுவது நிலை பூட்டப்பட்டுளதாம். அந்த நிலையில்தான் சுவாமி வீற்றிருக்கிறார். அதில் ஒருவரும் சென்றதேயில்லை. அங்கு ஆராதனை செய்கின்றவர்கள் சிங்களவர்கள். அவர்கள் அங்கியணிந்து தலைப்பாகையுடன் தாம்பூலமடக்கிய வாயுடன் இருக்கின்றனர். அவர்களிடம் தேங்காய்ப்பழங்களைத்தந்தால் அந்தத் திரைகளில் ஒரு திரையைத்தாண்டி ஆராதனைசெய்து விபூதி முதலிய பிரசாதங்களைத் தருகின்றனர்.

அந்த அர்ச்சகர்களுக்குக் கப்புரையாள் என்று அங்கு பேர். அவர்கள் பார்வைக்கு ஆசாரமில்லாதவர்களாகத் தோன்றுகிருர்கள். ஆயினும் தெய்வபக்தி நிறைந்தவர்களாம். கதிர்காம எல்லையை மிதித்தவுடன் எல்லோரும் ஆனந்தபாவசராகி அன்புமயமாகத் திகழ்கின்றனர். ஆலயத்தில் நுழைந்தவுடன் கண்ணீர்சொரிந்து அஞ்சலியஸ்தராகநின்று ஆண்டவனையழைத்து பக்திசெய்கின்ற காக்ஷி கல்மனத்தையுமுருக்கிவிடும். அக்காக்ஷியை நினைக்கும்போதே மயிர் சிலிர்க்கும்.

காலைமுதற்கொண்டு மாலைவரை தரிசனர்த்த பக்தகோடிகள் உடம்பில் வேல்களை நிரம்பக்குத்திக்கொண்டு மாணிக்க நதியில் நீராடி பலவகையான காவடிகளை எடுத்துக்கொண்டு சென்றவண்ணமாகவே இருக்கிருர்கள். கதிர்காமத்திலிருந்து அக்கினி திக்கில் 3 மைலில் விபூதிசுரங்கமென்று ஒன்றுளது அங்கு பூமியைப்பறித்தால் வெள்ளை விபூதிபோன்ற மண் கிடைக்கிறது. அந்த விபூதியைக் கொண்டு வந்து புதுச்சட்டியிலிட்டு தலைமீதுவைத்து அதில் நிறையக் கற்பூரத்தைக்கொட்டி ஏற்றி மாலை 5 மணியிலிருந்து மாணிக்க நதியில் நீராடி கூட்டங்கூட்டமாக கற்பூரதீபங்களை எடுத்துக்கொண்டு கோயிலுக்குப் போகிருர்கள். அப்படி போகும் கற்பூரதீபங்கள் ஆயிரக்கணக்காகப் பிரகாசிக்கின்றன. எங்கு பார்த்தாலும் கற்பூரதீபமாகவே இலங்குகின்றன. லக்ஷதீபம்போல் அந்தக்காக்ஷி மிகவும் அழகாக இருக்கிறது. அந்த மாலை நேரத்தில் கதிர்காமம் கந்தலோகம்போல் பார்ப்போர்களது மனத்தை அப்படியே பாவசப்படுத்துகிறது. அக்காக்ஷியை நினைக்குந்தோறும் இன்றும் கண்முன்நின்று நிலவுகிறது மறக்கமுடியாததும் பார்க்கத்தகுந்ததுமாகிய அக்காக்ஷியைக்காணுத கண் கண்ணல்ல. கருங் கல்மனதாயிருந்தாலும் அதைக் கண்டவுடனே நீராயுருகி நெகிழும்.

இரவு 10-மணிக்குமேல் ஏதோ ஒரு பெட்டி அந்தத் திரைக்குள்ளிருந்து எடுத்து அதையும் அதை எடுப்பவரையும் ஆடையால் மூடி யானைமேல்வைத்து பவனிகொண்டுவருகிருர்கள்; இதுதான் உத்சவம்; மேளதாளங்களுடன் வருகிறது. அதன்பிறகு யாம் திருப்புகழ் கோஷ்டி நிகழ்த்தினேம்; திருப்புகழைப்பாடி அதன் தத்துவங்களை எடுத்து வியாக்கியானம் புரிகின்றகாலை அந்த ஜனங்கள் மிகவும் ஊக்கத்துடனும் பக்தியுடனும் கேட்டுக்கொண்டுவந்தார்கள். பிரசங்கத்

தில் மிகுந்த இனிமையானபாகம் வரும்போதெல்லாம் அந்த ஜனங்கள் ஹரோ ஹரா ஹரோ ஹரா என்று முழக்கஞ்செய்து காட்டிய பேரன்பை எக்காலத்தும் மறக்கமுடியாது. கோஷ்டி விடியற்காலம் 4-மணிக்கு முடிவடைகின்றகாலத்தில் எல்லா ஜனங்களும் ஓவென்று கதறியழுது 10 நாளும் நீங்கள் இருந்து இந்தமாதிரி திருப்புகழ் கோஷ்டியும் அதன் தத்துவார்த்த வியாக்யானமும் செய்யவேண்டுமென வேண்டி மன்றாடினார்கள்.

மறுநாள் காலை கதிர்காமத்திலிருந்து காட்டுமார்க்கமாக 3 மைல் சென்று அங்கு கதிரமலை என்ற மலையின்மீது மிகுந்த சிரமப்பட்டு ஏறினோம்; மிகவும் பெரியமலை; ஏழு பிரிவாக இருக்கிறது அம்மலை; ஏறும் வழியில் ஆங்காங்கு காபி முதலிய இனிய பானங்களை உபசாரத்தோடு தருமம் புரிகின்றனர். உச்சியில் ஒரு வேல் இருக்கிறது. அங்குபோனவுடன் எல்லோரும் காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி "ஹரோ ஹரா" என்று கதறுகின்றனர். ஒரு சிலர் "அப்பு" "அப்பு" என்று கண்துளி சிந்தக் கதறுகின்றனர். அக்காக்ஷியைக் கண்டு திரும்பி கதிர்காமம் சேர்ந்தோம். அன்று இரவு முன்னாள் நிகழ்த்தியவாறு திருப்புகழ்கோஷ்டி நிகழ்த்தினோம்.

கோயிலுக்குப் பின்புறத்தில் வானளாவிய ஓர் அரசமரமுளது; ஒரு சிறு விநாயகச்சந்நிதியும், புத்தர்கோயிலும், தேவயானையம்மையார் சந்நிதியுமுள. ஊருக்குக் கிழக்கே வள்ளியம்மையார் சந்நிதியுளது. அந்த ஊரில் உத்சவமல்லாத காலங்களில் யானைகள் மந்தை மந்தையாகவந்து உலவுகிறதாம். உத்சவகாலத்தில் மட்டும ஆண்டவனருளால் மிருகாதிகளால் இடைஞ்சல் இல்லை.

அடுத்தநாள் கதிர்காமத்திற்கு வடக்கே 3 மைலிலுள்ள செல்வக்கதிர்காமஞ் சென்றிருந்தோம்; அங்கு மாணிக்க விநாயகர் சந்நிதியொன்றுளது; அங்கே மாணிக்க நதி மிகவும் மனோகரமாயுளது. ரிஷிகேஸ்வரத்தின் ஞாபகத்தையுண்டுபண்ணுகிறது. மறுநாள் திரும்பி முன் சொன்ன மார்க்கமாக தனுஷ்கோடி சேர்ந்தோம்.

இத்தகைய புண்ணியக்ஷேத்திரமாகிய கதிர்காமத்தை அன்புடன் சேவிப்பார்க்கு இகபரநலன்கள் எளிதிலுண்டாகும். பண்டைத் தவமிருந்தாலொழிய இக்கதிர்காமதெரிசனம் கிடைக்காது. ஏமகூடமென்னும் கதிர்காமத்தில் வாழுங் கதிர்வேலண்ணல் அன்பர்கள் அனைவருக்கும் எல்லா நலன்களையுமீந்து இன்னருள் புரிவாராக.

மாணிக்க நிறைகங்கை யாடியுன் னைப்பணிய
வந்திடும் பூதலத் தோர்
வாயுமர் பாடவுங் குருடர்கண் பார்த்திடவு
மலடிகள்பின் மைந்தர் பெறவும்
காணிந்த மாரவே லாவென்று மன்பரைக்
காடி புலி யானை சிங்கங்
காலிற் பணிந்தஞ்சி யோடவுங் கந்தனே
கண்கண்ட தெய்வ மெனவே
ஆணிப்பொன் முத்திமண் டபமேவு கச்சியினுள்
அடியேனை யாண்டு கொண்டேன்
ஆகத்தில் வந்தபிணி தீர்த்திடவு முன்னிற்கும்
ஆறுமுக மெய்த் தெய்வமே
சேணிற் புலோமசை வளர்த்தபெண் பிடிகணவ
செங்கீரை யாடி யருளே
தேவரோடு மனிதர்மணி கதிர்காம வேலனே
செங்கீரை யாடி யருளே.

---

## வினா விடை மணிகள்.

### ஆதி சங்கரர்.

க: பத்யத ரோதர்ம: க: ஸுசிரிஹ யஸ்ய மாநஸம் ஸுத்தம்.
க: பண்டிதோ விவேகீகிம் விஷமவதீர்ண குருஷு ||

கே,—எது பத்தியம்? (ஹிதமானது).

ப:—தர்மம்.

கே:—எவன் சுத்தன்?

ப:—எவன் மனது சுத்தமாக இருக்கிறதோ அவன்.

கே:—எவன் பண்டிதன்?

ப:—விவேகி. (விவேகத்தை யுடையவன்).

கே:—எது விஷம்?

ப:—பெரியார்வார்த்தையை அலட்சியம் செய்வது.

ஓம் குஹாய நம:

# குரு சிஷ்ய லக்ஷணம்

(62-ம் பக்கத் தொடர்ச்சி)

சச்சிதானந்தன்.

## குருவின் அவசியம்.

குருநாதனில்லாமல் ஒருவரும் இருக்கப்படாது ; ஏனெனில் எவ்விதம் சுறுசுறுப்பில்லாத புத்தியும், பக்தியில்லாத பூஜையும், அரசனில்லாத நகரமும், தானங்கள் செய்யாத கரங்களும், விசுவாசமில்லாத சிநேகமும், பூததயையில்லாத தவமும், பரோபகாரமில்லாத பிரயாசையும், விபூதியில்லாத நெற்றியும், பிரயோஜனமற்றதே : அதுபோல் குருபதேசமில்லாத ஜன்மமும் வீணேயாகும். எப்படி பெண்ணானவள் நாயகனில்லாமலிருந்தால் நிந்திக்கப்படுவாளோ அதுபோல் நாமும் குருநாதனில்லாமலிருந்தால் நிந்திக்கப்பட்டு நற்கதி சேரமாட்டோம்.

ஜகத்குருவாகிய சங்கராசார்ய சுவாமிகளும் யாவருக்கும் எப்படி விதிக்கப்பட்டிருக்கிறதோ அப்படியே நடக்க வேண்டுமென்று சற்குருநாதனைத் தேடினாரென்று அவர் சரிதையில் நாம் கண்ணுறுகிறோம். ஆகவே சகலாகிய நாம் குருநாதனில்லாமல் இருக்கப்படாதென்பதற்கு ஆதிசங்கருடைய சரித்திரமே போதியசான்று. சிற்சிலர் கூறுகிறார்கள் குருவும் நம்மைப்போல் மனிதர்தானே? அவரும் மாதா உதரத்திலிருந்தவர்தானே? அவரிடத்தில் எதற்காக நாம் உபதேசம் பெறவேண்டும்? அவர் சொல்வதெல்லாம் சாஸ்திரத்தில் இருக்கிறது? நாமே நல்ல நல்ல கிரந்தங்களை வாசித்துக்கொண்டு அந்தப்படி அப்யாசம்செய்தால் நமக்கு தானே ஞானமுண்டாகிவிடும் ; ஆகையால் குரு எதற்கு? குரு அநாவசியமென்றும், நம்மைக் காட்டிலும் குருவுக்கென்ன அதிகமாய்த்தெரியும்? எல்லாம் நமக்கு தெரிந்தவைகளையே அவரும் சொல்லுகிறார் என்னும் விபரீத பாவனையாக எண்ணுகிறார்கள் ; அவர்களுடைய அறிவீனத்தனம் என்னே! அவர்கள் நினைப்பானது எதுபோலுளதென்றால், ஒரு பெண்ணானவள் தன் நாயகனைக் கொன்று சந்ததி விளக்குவதற்காக மகவை வேண்டி தவமிருப்பது போலொக்கும் ; இதை பதிபசுபாச விளக்கத்தில்

முந்து நூலுழைப்பு மின்றி மூத்தர் பாலிணக்க மின்றி
சுந்தரக் கூரவன் பாதத் தொழும்புகள் சிறிது மின்றி
யந்தமில் ஞானம் வேண்டு மவாவெலாங் கொழுநற் கொன்று
சந்ததி வேண்டி நோற்குந் தன்மையோ டொக்க மன்றே

என்றனர்.

ஆயுள்முழுதும் சகல சாஸ்திரங்களையும் சங்கையின்றிப் படித்தாலும் சுகத்தையடையமாட்டான்; படிப்பினால் புத்தி நுட்பமட்டும் விளையுமே யன்றி ஞானத்தையடையான்; குருபதேசத்தினால்தான் ஞானத்தை யடையமுடியும். நான்கு வேதங்களையும் ஆறு சாஸ்திரங்களையும், சப்தகோடி மஹா மந்திரங்களையும், யந்திரங்களையும தெரிந்ததனாலேயே பிரஹ்மஞானமென்னும் சுகமுண்டாகமாட்டாது; சற்குரு கடாக்ஷத்தினாலேயே பிரம்மானந்தமான மோக்ஷ சாதனமுண்டாகுமென்று ஹரிஹராதி தேவதைகளும் கூறியுள்ளார்கள் மஹா நாராயணோபநிஷத்தில் ஐந்தாவது அத்யாயத்தில்

யதா ஜாத்யந்தஸ்ய ஸ்வரூபக்ஞானம் நவித்யதே
ததா குருபதேசே நவினா !! கல்பகோடிசதைரபி
தத்வஜ்ஞான நஜாயதே

பிறவிக்குருடனுக்கு வஸ்துக்களுடைய சுவரூபஜ்ஞானம் எப்படி விளங்காதோ அப்படி குருபதேசமின்றி நூறுகோடி கல்பங்களானாலும் தத்வஜ்ஞான முண்டாகமாட்டாது. ஆனால் ஒரு தெய்வயோகத்தால் ஞானத்தையடைந்தாலும் அந்த ஞானமானது எதுபோலொக்குமெனில்

குருவிலான் பெற்ற ஞானம் குமரியைக் குமரிகூடி
மருவிய இன்பமோக்கு . . . . . . . .
குருவினாற் பெற்ற ஞானங் குமரியைக் குமரன்கூடி
மருவிய இன்பமோக்கு மென்பர்நன் மதியுளோரே.

—பதிபசுபாசவிளக்கம்.

நாரதரும்.

புத்தகத்திலிருக்கிற வித்தையும் குருநாதனிடத்தில் அப்யாசம் செய்யப்படாத வித்தையும் சபையில் ப்ரயோஜனப்படாது; எப்படியெனில் கள்ளப்புருஷனிடத்திலிருந்து அடையப்பட்ட கர்ப்பமானது ஸ்திரீகளுக்குப் பயன்படமாட்டாது போலென்க" என்று கூறியிருக்கிறார்.

மேலும் குருநாதரானவர் தேற்றாங்கொட்டையைப்போலவும், ஒரு வண்டை (குளவி) போலவும் ஞாயிறுபோலவும், *பரிசன வேதியைப்போலவும் இருக்கிறார், தேற்றாங்கொட்டையானது தண்ணீரிலுள்ள அழுக்குகளை நீக்கி தெளிவிப்பதுபோல சீடனுடைய மன அழுக்கைப் போக்கடித்து தெளிவிக்கிறார். குளவியானது ஒரு புழுவைக்கொண்டுவந்து ஒரு மண் கூட்டிலடைத்து ஊதிக் குளவியாய் செய்வதுபோல் ஞானமில்லாதவனுக்கு நல்ல மநதிரோபதேசங்களைச் செய்து ஞானத்தை உண்டுபண்ணுவித்து தன்னைப்போல் சீடனையும் செய்துவிடுகிறார்.

சூரியனானவன் மூடுபனியைப் போக்கடிப்பதுபோல் சீடனுடைய மனதை மூடிக்கொண்டிருக்கிற வஞ்சகம முதலிய துர்க்குணங்களைக் களைந்தெரிகிறார்.

சாமான்ய உலோகங்களையும பொன்னாக மாற்றுகிற பரிசன வேதியைப்போல் கேவலம் ஞானசூன்யனாயிருக்கிறவனையும் ஞானவானாகச் செய்கிறார். இதனை த்யாகராஜரும்

தருவு சில்ல கிஞ் தருவே ப்ரமரமு
தருடே பாஸ்கருடு தருடே பருஸ வேதி

என்றார். மற்றோரிடத்திலும் த்யாகராஜர்

கறகை நஹ்ரு த்ரோக கஹுதமுநு கோட்ட ஸத்
தரு லேக யெடு வம்டி துணிகி தெலியக போது

என்பதனால் எண்ணிறந்த சன்மங்களில் செய்த வினையின் வலியால் அடர்ந்து வளர்ந்திருக்கிற மனோவியாதியாகிய காட்டை வெட்டியொழிப்பதற்கு ஸத்குருவென்னும் கோடாலி வேண்டுமென்றார்.

இத்யாதி காரணங்களால் எப்படிப்பட்ட யோக்யதையுடையவனும் ஆசிரியனில்லாமல் கிருதார்த்தனாகமாட்டான். த்யாகராஜர் "குரு லேக எடுவம்டி குணிகி தெலியகபோது" என்றார். ஆகவே, ஆசிரியன் அவஸ்யமிருக்கவேண்டும்.

## "குருவை யடையும் வழி"

நமக்கு எக்காலத்தில் குருநாதன் கிடைப்பான்; எப்பொழுது தரிசிப்போம்; அவருடைய ஆக்கினையை என்று நாம் செய்வோம் என, கோடைகாலத்து பயிரானது மழையை எதிர்நோக்குவதுபோல் நாம் குருநாதனுடைய தரிசனத்துக்காக வருந்தி எதிர்பார்க்க

* ஒரு கொடி.

வேண்டும். ஒருவன் சமுத்திரத்தில் இடறிவிழுந்துவிட்டால், கரை சேருவதற்கு எவ்வளவு துரிதமாகத் தெப்பத்தைப் பிடிப்பதற்குத் தாவுவானோ அதுபோல் நாம் இறப்புப் பிறப்பாகிய அலைகள் நிரம்பிய சமுசாரமென்கிற சமுத்திரத்தில் விழுந்துகிடக்கின்ற நாம் மோக்ஷ மென்னும் கரை சேர்ப்பிக்கிற தெப்பமாகிய குருநாதனை அடைவதற்கு விரைந்து முயற்சிசெய்யவேண்டும். பிறவிக்குருடனை அநாதன் கோடைக்காலத்தின் நடுப்பகலிலே நீர் தேடித்திரியுமாறுபோலவும் நாம் மிகவும் வருந்தி குருநாதரைத் தேடவேண்டும்.

நெருப்புவழி நடப்பி னீர்தேடு வார்போற்
கருப்பிலனந் தேடுங் கதைபோல்—விருப்புற்றுப்
பக்குவத்து நாயகனைத் தேடுகின்ற பைந்தொடிபோற்
சற்குருவைத் தேடுந் தரம்,

—வள்ளலார்.

பக்குவம் வந்த சமயத்தில் இருவினையொப்பு மலபரிபாகம் உண்டாகச் சத்தினிபாதம் விளைந்த வழி மானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோல் தனிமயிலேறும் இராவுத்தனாகிய ஆண்டவன் மானிடச் சட்டை சாத்திக்கொண்டு ஆசிரியமூர்த்தமாக எழுந்தருளுவான்.

இதனைக் கீழ்வரும் ஆன்றோர் வாக்கியத்தாற் கவனிக்க:

தாயுமானார்:

அடிமைக்கா வளர்த்தேடுத்த வன்னைபோல
நீதி பெறுங் குருவாகி எனவும்,

பதிபசுபாசவிளக்கம்:

மருவி யுடல் வெறுப்பும் வந்தா
லிருவினை யொப்புமங்க ணெய்திடு மெய்துங்காலம்
கருமல பாகமுண்டாம் பாகந்தான் கடிதிற்சேரும்
திருவருட் சத்திபாதஞ் செறிந்திடுங் குருவுமன்றே, எனவும்,

சிவானுபூதிவிளக்கம்:

பருவங் குறித்துப் பாவோளி வந்திங்
குருவந்தரித்தாலொருதவங்கள் வேண்டுமோ
செய்தற்கரிய தவஞ்செய்தற் பின்னல்லவோ
வெய்தற் கரியபிரா னெம்போல வந்ததுவே எனவும்,

சிற்றம்பலநாடி தாலாட்டு:

கண்ணொரு மூன்றுங் கனற்கரமு மைம்முகமு
மண்ணவர்க்குக் காணு வகையொளித்து வந்தானோ
எங்கெங்குந் தானாகி யென்போ லுருக்கொண்டு
மங்கும் பிறவிதனை மாற்றவந்த வள்ளலோ எனவும்,

திருவாசகம் :

அருபரத்தொருவன் அவனியில் வந்து
குருபரனாகிய அருளிய பெருமையை சிறுமையென்றிகழாது
எனவும்,

திருவருட்பயன்:

பார்வையென மாக்களை முன்பற்றிப் பிடித்தற்காம்
போர்வையென காணார் புவி எனவும,

போற்றிப்பஃறொடை :

பூவலயந் தன்னின்று நீங்காச்சக லர்க்கவர்போல்
முன்னின்று மும்மலம் தீர்த் தாட்கொள்கை எனவும்,

சிவப்பிரகாசம்:

. . . . முன்னம் ஈட்டிய தவத்தினாலே இறை அருளுருவாய்வந்து
கூட்டிடு மிவற்றை நீக்கிக் குறைகழல் குறுதுமாறே எனவும்,

சித்தியார்:

. . . துன்னிய ஐம்புலவேடர் சுழலிற்பட்டுத் துணைவனையும்
அறியாது துயருறும் தொல்லுயிரை மன்னும் அருட்குருவாகிவந்(து)
அவரின் நீக்கி மலம் அகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பான்
எனவும் வருவனவற்றாற்காண்க.

இதற்கு நமது ஸ்ரீ அருணகிரிநாதஸ்வாமிகள் நோய்வாய்ப்பட்ட சமயத்தில் உலகத்தை வெறுத்து உயிரைத் துறப்பதற்காக (அருணையில்) கோபுரத்தின்மேலேறி ஒருவன் உண்டேல் என்னைக் காக்க, இல்லையேல் உயிர் துறக்க என்று விழுந்தகாலத்தில் அக்கணமே அறுமுகப்பெருமான் குருவடிவாக எழுந்தருளியதே சான்று.

(தொடரும்.)

---

## யக்ஷப்பிரலனை.

வினு :—க்ஷத்திரியர்களுக்கு தேவதன்மை எது ?

விடை :—பாணங்களும அஸ்திரஙகளும தேவதன்மை.

வினு :—ஸத்துககளுககுபோல இவாகளுக்கு தர்மம் எது ?

விடை :—ஸத்துககளுககுபோல இவர்களுககு யகஞமானது தர்மம.

வினு :—இவர்களுககு மானிடததனமை எது ?

விடை :—இவர்களுககு பயமானது மானிடததனமை.

வினு :—அஸத்துககளுக்குபோல இவர்களுககு அதர்மம் எது ?

விடை :—அஸத்துககளுககுபோல இவர்களுக்குத துன்பமுற்றவர்களைக கைவிடுதல் அதர்மம.